RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2247

OPEN ACCESS

# பெண் உடல் மீதான ஆணின் அதிகாரப் போக்கின் வழி உளவியல் பார்வை

**ச. அரியநாச்சியம்மாள் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பி.கே.ஆர். மகளிர் கலைக்கல்லூரி, கோபிசெட்டிபாளையம்-638476, தமிழ்நாடு, இந்தியா

# A Psychological View of Male Dominance Over the Female Body

**S. Ariyanacheyammal [a, *]**

[a] Department of Tamil, P.K.R. Arts College for Women, Gobichettipalayam-638476, Tamil Nadu, India

* Corresponding Author: ariyanacheyammal@gmail.com

Received: 13-04-2022
Revised: 20-07-2022
Accepted: 03-08-2022
Published: 26-08-2022

Check for updates

**ABSTRACT**

Gender discrimination has existed since the dawn of time. The woman has become the primary recipient since she began living in the wild. The woman has been a hunter and the primary recipient of group decisions. The maternal social system is the life source of our ancestors. Adith Tamils learned about sex by looking at the sex of animals. They do not know that childbirth is only through sex. But they knew this was what sex was all about. In this context women were accepted as the primary recipients on the basis of sex. Over time the woman's sex becomes associated with the man's body politics. This article explains the politics of the male body through a short song.

**Keywords:** Kurunthokai, Gender Differences, Genter Politics, Male Dominance

## முன்னுரை

இயற்கையின் நடைமுறை இனப்பெருக்கமும் அதை சார்ந்த வாழ்வியலுமாகும். அனைத்து உயிர்களுக்கும் பாலியல் உணர்வு என்பது இயற்கை. தலைவனின் பாடல்களில் பெண்மை சார்ந்த வர்ணனைகளில், தன் தேவை சார்ந்தவையே முதன்மை பெறுகின்றது. தலைவனின் எண்ணம் பாலியல் சார்ந்து இயங்கவல்லது. தலைவியின் எண்ணங்களை தனக்கானதாக பயன்படுத்தும் போக்கு தலைவனிடம் காணப்படும். சூழ்நிலைகளை தனக்கானதாக மாற்றியும், ஏதேனும் ஒரு வகையில் பெண்மையை வென்றுவிடலாம் என்ற அசாத்திய நம்பிக்கை ஆணுக்குண்டு. பெண்ணை உணர்வுகள் சார்ந்து விரைவில் வீழ்த்தி விடலாம் என்ற ஒரு போக்கு ஆணிடம் பொதுவாகவே காணப்படுகின்றது. உணர்வெழுச்சி என்பது பொதுவாகவே பெண்களுக்கானவையே என பெருமளவு முன்மொழியப்பட்டது. இதை ஆங்கிலத்தில் "சென்டிமென்ட்" என்று உரைப்பர். பெண்ணின் மனதை சமாளிக்க ஆண் கையாளும் உத்திகளுள் உடலியல் சார்ந்த அரசியலும் ஒன்று. ஆண் பெண்ணின் உடலியல் சார்ந்த அத்துமீறலும் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன.

## பாலியல் அரசியல்

பாலியல் என்பது பாலின்ப ஈடுபாடுகள், நடத்தைகள், தொழில்பாடு பற்றிய துறையாகும். பெண்பால் மற்றும் பால்நிலை சார்ந்த அடையாளங்களை விமர்சிப்பது, கேள்விக்குட்பட்படுத்துவதற்கான எல்லைகளை ஆணே நிர்ணயித்துக் கொள்கின்றான். பெண்ணைப் பெற ஆணின் மனநிலை பெண்ணுக்கான இருப்புநிலையை மாற்றியமைக்கின்றது. ஆணின் பாலியல் அரசியல் இத்தகைய

கருத்தாக்கங்களை மேற்கொள்கின்றது. பெண்ணிடமிருந்து பெண்ணுக்கே தெரியாமல் பெண்ணின் பாலியலை சுரண்டுதல் என்பதே பாலியல் அரசியல் என்றாகின்றது. பெண்ணின் பாலியல் உணர்வு வெளிப்பாடு ஒரு பேசுப் பொருளாக அல்லது இரகசியமாய் மட்டுமே பேசப்படும் விசயமாக இருக்கின்றது.

ஆண் தன்னுடைய உணர்வை வெளிப்படுத்த தயங்குவதில்லை. பெண்ணுடல் என்பது தலைவனுக்கு நுகர்வுப் பொருளாய், தாழ்நிலைக்கான குறியீடாய் அமைகின்றது. பெண்ணுடல் சமூகத்தின் பாலியல் தேவைக்கான களம் மற்றும் ஆணின் ஆதிகார கூட்டுச்செயல்பாடுகளாக அமைகின்றது. இதை எழுத்தாளர் மகாராசன் அவர்கள் திறன்பட எடுத்துரைகின்றார். "பெண்ணுடல் ஆணுடல் என்பதாக உருவாக்கிவிடப்பட்ட கருத்தாக்கங்கள் சமூகத்தின் மரபைப் பேணுகிற போது அறமாக ஆக்கப்பட்டிருக்கிறது. பெண்ணின் உடல்தான் பெண்ணின் தாழ்நிலைக்கான காரணம்; இத்தாழ்நிலைதான் பெண்ணுக்கு அமைந்துவிட்ட இயற்கைவிதி; தலைவிதி; தலைஎழுத்து என்று ஆழமாக கற்பிக்கப்படுகின்றது. அதாவது பெண் ஆணைவிட தாழ்வானவராக ஆக்கப்பட்டதற்கு இயற்கையிலேயே அமைந்த உடல்தான் என உருவாக்கிவிடப்பட்ட நம்பிக்கைகளும் கருத்ததாக்கங்கள்தான் பெண்ணுடல் மீதான அடக்குமுறையை ஆழப்படுத்தியிருக்கிறது எனலாம்." உடலை முன்னிறுத்தும் ஆணாதிக்க உடலரசியலுக்கு ஆண் தனக்கானதை பெற சமூகம் சார்ந்து பெண்ணின் அறம், கற்புநெறியை முன்னிறுத்தி பெண்ணுக்கான சமூகவெளியை விரியவடையவிடாமல் பெண்ணை விருப்ப அரசியலுக்கு ஆட்படுத்துகின்றனர் (Maharasan, 2010).

ஆணின் பகிர்வை இலக்கியப் பனுவல்கள் வழி நோக்கும் போது அனுபவப் பகிர்வைத் தருவதோடு, கருத்துப் பரிமாற்றத்தையும் பெறுகின்றது. இலக்கியப்படைப்புகள் யாவும் தான்தோன்றித்தனமாக உருவாக்கப்படுவதில்லை. சமூகத்தின் நியதிகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப கட்டமைப்போடு உருவாக்கப்படுகின்றது. அவ்வாறு உருவாக்கப்படும் இலக்கியங்களே சமூகத்தால் அங்கிகாரம் பெறும். அவ்வகையில் நோக்கும் போது சங்ககால சமூகம் சார்ந்து குறுந்தொகையில் பதிவு செய்யப்பட்டுள்ள கருத்தாக்கங்கள் சமூகத்தின் கட்டமைப்பிற்குள் ஏற்புடையதாகின்றது. பெண்ணுக்கும் ஆணிற்குமான அறங்கள் தானாக வழிவழியாக வந்தவையல்ல. மாறாக அவை ஆணாதிக்க முறையினால் செயற்கையாய் உருவாக்கப்பட்டவை. இவ்வறங்கள் பண்பாட்டு நடத்தைகளின் வழியாகவும், கலாச்சார அமைப்புகளாலும் சமூகத்தின் பொதுபுத்தியில் நிலைப் பெற்றவிட்டன. இலக்கியங்கள் வழி இத்தகைய பதிவுகளை காணமுடியும்.

## தொல்காப்பியர் காட்டும் பெண்கள்

இலக்கியங்கள் மனிதனின் வாழ்வியலை எடுத்தியம்பும் காலக்கண்ணாடி ஆகும். தொல்காப்பியம் இலக்கண நூலாக, இலக்கியங்கள் வழி அறியலாகும் கருத்துக்களுக்கு உயிர் கொடுப்பவையாக அமைகின்றன. இலக்கியங்கள் வழி இலக்கணம் மக்கள் வாழ்ந்த வாழ்வியலின் ஆதாரமாகவும் விளக்குகின்றது. பெண் பற்றிய பதிவுகளும் செய்திகளும் இவ்விடம் எண்ணி வியக்கத்தக்கவையாகும்.

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பா லான"

அடக்கம், அமைதி, நேர்மை, அறிவு, தகுவன பேசுதல் அவளின் பண்புகளாக பிறந்ததிலிருந்து கூடவே வளர்ந்து வர வேண்டுமென தொல்காப்பிய நூற்பா சான்று பகர்கின்றது (Ilamporannar, 2005).

"கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"

"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்

எண்ணுங்காலைக் கிழத்திக் கில்லை"

மனிதனின் இயல்புணர்வு அன்றாடம் பசி எடுத்தல், சாப்பிடுதல், உறங்குதல் போலவே பருவத்தே இனவிளைச்சு என்பதும் அடிப்படையான ஒன்றாக அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக அமைகிறது (Ilamporannar, 2005). ஆனால் பெண் தன்னுடைய பாலுணர்வு வேட்கையை குறிப்புகளினாலோ வெளிப்படையாகவோ கூறுதல் கூடாது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. பெண்ணின் பாலியல் உணர்வை வெளிப்படையாக எடுத்துக்கூறும் பாங்கு ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கு மறுக்கப்படுகின்றது. இதன் வழி பெண்ணுக்கான இருப்பு என்பது இதுதான் என தொல்காப்பியர் நூற்பா வழி தெளிவுபடுத்துகிறார்.

ஆண் என்பது நெடிலாகவும், பெண் என்பது குறிலாகவும் பல ஆண்களின் பொதுப்புத்தி உரைக்கின்றது. எழுத்துக்களின் மட்டுமே குறில் நெடில் அதைவிடுத்து பொருமையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று. ஆணின் பொதுபுத்தி என்பது ஆண் பெண்ணை விட உயர்ந்தவன் என்ற விளக்கத்தினை முன்வைக்கின்றது. பெண் என்ற படைப்பு பல இடங்களில் காட்சிப்பொருள், பனைய பொருள், கவர்ச்சிப் பொருள், இலவச பொருளாக கருதப்படுகின்றது. காப்பியம் தொடங்கி கதையாடல், கவிதை போன்றவற்றில் கையாளப்படும் பெண்மை சார்ந்த உடல் அரசியல் என்பது உற்று நோக்க கூடியதாக அமைகின்றது. பெண்ணின் உடலை அரசியலுக்கு ஆட்படுத்துவதன் விளைவு ஆண் உயர்வு சிறப்பு பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் தான். மகாபாரதத்தில் திரௌபதி பனையப் பொருளாக வைக்கப்பட்டாள். சிலப்பதிகாரத்தில் மாதவிக்கு விலை கூறப்பட்டது. இன்றையத் திரைப்படங்கள் பலவற்றில் பெண் கவர்ச்சிப் பொருளாக மட்டுமே காட்டப்படுகின்றாள். விளம்பர பலகைகளில் பெண்ணின் உருவம் பெரிதுப்படக் காட்டப்படுகின்றது. பெண்ணைச் சார்ந்த உடல் வர்ணனைகளே அதிக இடங்களில் இடம்பெறுகின்றது.

## திருக்குறள் காட்டும் பெண்கள்

திருக்குறள் உலகம் போற்றும் பொதுமறை இலக்கியம். துணைநலம் என்னும் அதிகாரம் பெண்ணுக்கு மட்டுமே என்ற பொருளில் அமைக்கப்பட்டுள்ளது. ஆணுக்கென்று எந்த ஒரு வரையறையும் திருக்குறளில் குறிப்பிடப்படவில்லை. பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற பண்புகளுடன் மட்டுமே நிகழ வேண்டும். கணவனின் பாதம் தொழுதல், கணவனுக்கு தொண்டு செய்தல் அவ்வாறு உள்ள பெண்கள் மழை பெய் என்று சொன்னாலும் பெய்யுமாம்.

“தெய்வந் தொழாமல் கொழு நற்றொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை"

“தற்காத்துக் தற்கொண்டான் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

துணைநலம் என்னும் அதிகாரம் பெண்ணுக்கு சில வரையறைகளை வகுக்கின்றது (Parimezlagar, 2002). ஒரு ஆணுக்கு பெண் சரியான துணையாக வரும் பொழுது பல வளங்கள் அவனுக்கு கிடைக்கும். நிர்வாகத் திறன் இல்லாத பெண்ணை மணக்கும் பொழுது ஏற்றம் ஏற்படாது. வேண்டிய பொழுது வரும் மழையை போன்றவள் மனைவி என்று இன்னும் பல சான்றாதாரங்களை திருக்குறள் உரைக்கின்றது. கணவனை மட்டுமே தொழக்கூடிய பெண்களுக்கு எதிர் பார்க்கும் பொழுது மழை பெய்யும். பெண் என்பவள் இவ்வாறு தான் இருக்க வேண்டும், தன்னைக் காத்து, தன்னை சார்ந்தவர்களையும் பாதுகாத்து தகுதிக்கு உதாரணமாக வாய்ச்சொல் காத்து சோர்வில்லாமல் இருப்பவள் என்று உரைக்கின்றார். இவ்வாறு பெண்ணை அறிவியல் ரீதியாக அணுகாமல் உணர்வு ரீதியாக மட்டுமே அணுகுகின்றனர். பெண்ணின் அறிவையும், உணர்வுகளையும் சடங்குகள், சம்பிரதாயம், ஒழுக்கம், கட்டுப்பாடு என பல்வேறு பொருமைகளின் அடிப்படையில் பெண்ணை அடக்கி வைக்க முற்படுகின்றனர். பெண்ணை உடலியல் சார்ந்தே அணுகும் போக்கு ஆணிடம் பெரும்மளவு காணப்படுகின்றது. பெண்ணுடல் என்பது ஆணின் நுகர்வு நிலமாகவும், ஆணிண் அதிகாரக் குறியீடாவும் காட்டப்பெறுகின்றது.

## பெண் உடல் மீதான தலைவனின் அதிகாரப் போக்கு - ஓர் உளவியல் பார்வை

உலகில் உள்ள அஃறிணை, உயர்திணை என்ற எல்லா உயிர்களுக்கும் ஆண், பெண் என்ற வேறுபாடுகள் உண்டு. அவற்றின் உடலில் ஆண், பெண் என்ற உடல் மாறுபாடுகளும் உண்டு. மனிதர்களிடம் பெண்ணுடல், ஆணுடல் என்பது அழகு மற்றும், வீரம் சார்ந்தவையாக அமைகின்றது. விலங்குகளில் வலிமை மற்றும் அழகு சார்ந்தவையாக அமைகின்றது. பெண்ணுடல் ஆணைக் காட்டிலும் நுகர்வு சார்ந்து வர்ணிக்கப்படுகின்றது. பெண் என்ற சொல்லை பெற்ற மனிதனோ, மிருகமோ, பறவையோ எப்படி இருப்பினும் உடல் மீதான புணர்ச்சி, ஈர்ப்பு ஆகியவை ஒன்று போலத்தான் தோன்றும். மனிதனிடம் இத்தகைய உணர்வு என்பது வேறுபட்டு காணப்படும். எச்செய்தியைக் கூற விழையும் போதும் அதில் பெண் உடல் என்பது இல்லாமல் போகாது. ஊடலும், கூடலும் இலக்கியங்களில் சிறப்பானதாக கூறப்படும். அவற்றுக்குள் ஆண் பெண்ணின் உடலில் மீதான அதிகாரமும் அத்துமீறலும் வெளிப்படையாக புலப்படும். அதிகாரமும் அத்துமீறலும் பெண்ணின் உடலைச் சார்ந்து மட்டுமே இயங்கும். பெண்கள் என்றும் சுயசார்பு அற்றவர்களாக காட்டப் பெறுகின்றனர். காமம் சார்ந்து பலவீனமடைந்தவர்களாக காட்டப்படுகின்றனர். பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை ஆண்பாற் புலவர்களின் எண்ணிக்கை விட மிகக் குறைவு. அதேபோன்றுதான் பாடல்களின் எண்ணிக்கையும் பெண்பாற் புலவர்களின் இருப்பு, காலத்தன்மை, இயற்கை அறிவு, பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றை எல்லாம் ஆய்வு செய்வதை விட பாலினம் சார்ந்த குறியீடுகளே பெருமளவு தேடுகின்றனர். பெண் தங்களுக்கு உண்டான உணர்வுகளை, உணர்ச்சிகளை தாங்களே பாடல்களின் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளனர். ஒன்றை வென்றால் இன்னொன்றை பெறலாம் என்பது போன்ற கட்டமைப்புடன் உருவாக்கப்பட்டது பெண்ணின் உடல் மீதான அரசியல் மற்றும் அத்து மீறல் ஆகும்.

## சங்கப் பாக்கள் வழி உடல் அரசியல்

சங்ககால இலக்கியங்களில் பெருமளவில் உடல் அரசியல் என்பது சாதாரணமாகக் கையாளப்படும் உத்திகளாக மாறிவிட்டது. குறுந்தொகையில் தலைவன் கூற்று பாடல்களில் நலம் பாராட்டல் என்று உத்திமுறை பெருமளவு கையாளப்படுகின்றது. தலைவியின் கோபத்தைத் தணிக்க தன்னிலை மாறாமலும், தன்னுடைய விருப்பம் மாறாமலும் நலம் பாராட்டி தான் நினைத்த ஒன்றை செயல்பட வைத்து விடுகிறான் தலைவன்.

“அமிழ்தத் தன்ன அம்தீம் கிளவி

அன்ன இனியோள் குணனும் இன்ன

இன்னா அரும்படர் செய்யும் ஆயின்

உடன்உறைவு அரிதே காமம்

குறுகல் ஓம்பமின் அறிவுடை யீரே”

அமிழ்தம் போன்றதாக தலைவியின் சொற்களை உரைக்கின்றார் (Puliyur Kesigan, 2010). தலைவியின் நலம் பாராட்டல் என்பது இங்ஙனமே தன்னுடைய தேவை சார்ந்து வெளிப்படுகின்றது. தலைவன் தனது தேவையை நிறைவேற்ற மற்றுமொரு பாடல் இங்ஙனம் ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

“பயிலியதுகெழீஇய நட்பின் மயிலியல்

செறிஎயிற்று அரிவை கூந்தலின்

நறியவும் உளவோ நீ அறியும் பூவே"

இவ்வரிகள் இறையனார் எழுதியதாக கருதப்படுகிறது (Puliyur Kesigan, 2010). இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிறகு பெண்ணின் நாணம் நீக்குதல் பொருட்டு மெய் தொட்டுப் பயிறல் மூலமாக எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நலம் பாராட்டல் இப்படி நிகழ்கிறது. எத்தனையோ

மலர்களிலேயே தேன் உண்டாய், வாசனை கண்டாய் என் தலைவியைப் போல் மலரை நீ கண்டது உண்டா? என வினவவும், பூக்கள் பல இருப்பினும் வடிவம், நிறம், வாசனை என்பது ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபாடு உடையதாகவும், பூக்கள் என்பது பொதுப் பெயராய் இருப்பினும் பூக்களிலே பல வண்ணம் வடிவம் ஒவ்வொன்றும் தனித் தன்மை உடையதாகும். பூக்களை கண்டதும்பி என்பது இங்கு தலைவனின் குணங்களை எடுத்துரைப்பதாக அமைகின்றது. தலைவன் வண்டு போல பல பெண்களின் வாசனையை நுகர்ந்து இருப்பினும், தலைவியின் நலம் பாராட்டும் போது தன்னை வண்டிக்கு உவமையாக்கி யான் கண்ட மலர்களின் வாசனையில் தலைவி உயர்ந்தவர் என உரைக்கின்றான். இங்கனம் தலைவியை உடல் ரீதியாக அணிகுகின்றான். இதை அணுகுதல் - அணுகுதல் போராட்டம் என்று இதை உளவியலில் உரைப்பர். உளவியலில் அங்க நலம் பாராட்டல் ஒரு மனிதனின் உயர்வு ஊக்கியை எடுத்துரைப்பவையாக உள்ளன. பெண்ணின் இத்தகைய ஊக்கிகளை தலைவர்கள் சரியாக கையாளுகின்றனர். தன்னை உயர்வு படுத்திக் கூறும் போது மனதில் எழும் ஒரு வகையான எண்ண அலைகள் தலைவனின் நோக்கம் சார்ந்து அமைந்து விடுகின்றது. இங்ஙனமே தலைவியும் கைக்கொள்ளப்படுகின்றாள். தலைவனின் எண்ணமும் நிறைவேறுகின்றது.

"அமிழ்து பொதி செந்நா வஞ்ச வந்த"

அமிர்தத்தின் இனிமை தன்மையுடைய வஞ்சியே என பெண்ணை விளிக்கின்றார் (Puliyur Kesigan, 2010). நலம் பாராட்டுதல் பெண்ணின் உணர்வுகளை தூண்டும் வகையில் அமைகிறது. ஐங்குறுநூற்றுப் பாடல் பெண்ணை இவ்வாறு விளிக்கின்றது

"வண்டு தாது ஊதும் ஊரன்

பெண்ணுடன் விரும்பின்று அவள் தன் பண்பே"

காதல் பரத்தை கூற்றாக அமைகிறது (Somasundharanar, 2009). காதல் பரத்தை தலைவியின் சிறந்த பண்பாக அவள்பால் அமைந்த நல்ல அமைதியான பண்புகளே அன்றி பெண்மை நலமன்றாம் என்கிறாள். பேசாத பண்பே சிறந்த பண்பாக தலைவனுக்குப் படுகின்றது. தன் உணர்வு, உணர்ச்சி, எண்ணம், செயல்பாடுகள், காமம், இச்சை போன்ற செயல்களை காதற்பரத்தை, பரத்தை, சேரிப்பரத்தை, இற்பரத்தை போன்றோர் வெளிப்படையாக வெளிப்படுத்துவதினால் சமூகம் அவர்களை கீழ்நிலை நோக்குடன் எண்ணுகின்றது. தலைவனின் பிரிவை தாங்க முடியாத தலைவி தலைவனை எண்ணி காத்திருத்தலை அழகுபட உரைக்கும் பாடல்கள் பல உண்டு. ஆனால் பரத்தையரின் பிரிவு வலியை உரைப்போர் மிகச் சிலவே ஆகும். காமத்தின் வாயிலாக பெண்ணை அணுகும் பலர் உணர்வுகளை வெளிப்படையாக ஆகுபவர்களுக்கு தலைவி என்ற பட்டம் கொடுக்கப்படுவது இல்லை. இலைமறைக்காயாக வெளிப்படுத்துவதே விரும்புவர். தலைவி அடைந்த காதலின் வலிமையை தோழி இங்ஙனம் உரைக்கின்றாள்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்

சாரல் நாட செவ்வியை ஆகுமதி

உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"

தோழி தலைவியின் காம மிகுதியை ஒரு வேர்பலா மரத்தின்கண் உவமை ஆக்கியுள்ளார் (Puliyur Kesigan, 2010). பலாப்பழம் கனிந்து விட்டது. தலைவிக்கு உன் மேல் உள்ள காமமும் கனிந்து ஆகிவிட்டது. ஊரார் பழத்தை உணவாக மாற்ற திருமண ஏற்பாடுகளுடன், பழமானது மற்றவர்களுக்கு இறையாக மாறிவிடும். இல்லையேல் யாருக்கும் பயனற்று வேரிலேயே அழுகிவிடும். தலைவன் தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற இற்செறிப்புடன் முடிகிறது. சங்க குறுந்தொகைப் பாடல்வழி பெண்ணின் காமத்தை வெளிப்படையாக கூறும் மரபு அன்றி, உரிமையும் அன்றி விளங்குகின்றாள் தலைவி. பேசப்படும் பெண்களை பெண் குலத்திலேயே கீழ்குலம் என்பது போல ஏற்பட்டு விட்டது. சமுதாயம் பெண்ணின் உடல் காமம் சார்ந்தவையே என்ற எண்ணம் வலுப்பெற பெற்றுள்ளது. பெண்கள் என்ற சொல்லை மென்மை, அமைதி, அழகு என்ற பொருண்மையில் மட்டுமே கைக்கொள்கின்றனர்.

## இக்கால இலக்கியங்களில் பாலியல் பதிவு

2019 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்ற சோ. தர்மன் அவர்களின் சூல் என்ற நாவலில் ஆசிரியர் படைத்த கொப்புளாயி என்ற கதாபாத்திரம் பாலியல் சார்ந்த ஆணின் அத்துமீறலையும், அதிகாரத்தையும் வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. ஆசிரியரின் பெண் உடல் மீதான அத்துமீறல் என்பது பெண்ணை மட்டும் "மலடி" "வறடி" என்ற சொற்புனைவுகளிலும், ஆணை மலடன் என்றோ வறடன் என்றோ சொற்களில் கூட பயன்படுத்தப்படவில்லை. பெண்ணின் கதாபாத்திரம் சார்ந்தே உரைக்கின்றார்.

"தன்னில் புதைந்த காமத்தீயை, விரசத்தை, காம பரவசத்தை மறந்தாளா? குழந்தை பெற லாயக்கில்லாத இந்த மலட்டு உடலை, உடலின் இம்சையை, ஊராரின் அனுதாபத்தை, ஏச்சை, எள்ளலை இதன் மூலம் மறந்தாளா? கொப்புளாயின் செயல்கள் நரை விழுந்த முதிர்ச்சியில் அல்ல, நரை விழுந்தும் முதிராத கன்னியின் செயல்கள் கொப்புளாயி" (Dharman, 2016).

பாலின உடல் அரசியலை எடுத்துக்காட்டும் சிறந்த படைப்புகள் இவை. மாடுகள் வைத்து பால் கறந்து தொழிலை மேற்கொள்ளும் கொப்புளாயி கதாபாத்திரம் சித்தரிக்கப்படும் போது மலடி என்ற சொற்பதத்தை ஆசிரியர் முன்வைக்கின்றார். ஆனால் கணவருக்கு மலடன் என்ற சொல் காட்டப்படவில்லை. இவ்விடம் பெண்ணை தன் காம தேவையை நிறைவேற்றும் இடங்கள் மறுக்கப்படுவதினால் பெண் தன்னுடைய உணர்வை தான் செய்யும் தொழிலின் வழி மடைமாற்றப்பட்டு உணர்வுகளை வெளிக்கொணர்கின்றாள். மாடு மேய்க்கும் போது மாட்டை திட்டியும், மாட்டிடம் அனுதாபம் கொண்டும் தன் உணர்வினை வெளிக்கொணர்கின்றாள். தாய்மை உணர்வை மாடுகளிடம் காட்டுகின்றாள். தன் இயலாமையையும் மாடுகளிடமே வெளிப்படுத்துகின்றாள். இவ்விடம் ஆண் என்ற பொருண்மைக்கு சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளமை பெண் உடல் மீதான அத்துமீறலை எடுத்துக்காட்டுகின்றது.

## முடிவுரை

பெண்ணை அஃறிணையாக மட்டுமே கருதி பரிசுப் பொருளாகவும், பணைய பொருளாகவும், விளம்பரப் பொருளாக மட்டுமே கருதும் சமுதாயம் விழித்தெழ வேண்டும். பாரதியார் குறிப்பிடும் புதுமைப் பெண்ணாக மாற வேண்டும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு நாய்க்கு வேண்டும். பெண்ணுக்கு உயர்ந்த எண்ணமே வேண்டும் என்ற பாரதியின் எண்ணத்திற்கு உயிர் கொடுப்போம். காமத்தையும், கற்பையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவுடமை ஆக்கவேண்டும். பெண்ணை மட்டுமே உடல் சார்ந்து அணுகுவதையும், உடலின் மீதான அத்துமீறலையும், அதிகாரத்தையும் மாற்றுருவாக்கம் செய்திட வேண்டும். ஆணின் பொதுபுத்தியை சமூக ஊடாடல்களிடமிருந்து மீட்டெடுத்து பெண்மையைப் போற்றும் சமூகமாக மாற வேண்டும்.

## References


Dharman, S., (2016) Sool Novel, Adaiyalam Padhipagam, Tirchy, India.

Ilamporannar, (2005) Tholkkappiyam Porullthigaram, Saratha Padhipagam, Chennai, India.

Maharasan, (2010) Penmozhi Iyangiyal, Thozhamai Veliyeedu, Chennai, India.

Parimezlagar, (2002) Thirukkural Mulamum Uraiyum, Saratha Padhipagam, Chennai, India.

Puliyur Kesigan, (2010) Kuruththokai Mulamum Uraiyum, Saratha Padhipagam, Chennai, India.

Somasundharanar, P.V., (2009) Ainkurunuru Mulamum Uraiyum, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License